25.06.2026

OS. No. **81/2021**

**வா.சா.2 –** திரு. தங்கமுத்து த/பெ. பழனியாண்டி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கில் வாதி முருகானந்தம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்து இருக்கிறேன் என்றால் சரிதான். முருகானந்தம் தாக்கல் செய்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். முருகானந்தத்தின் மீது வேறு ஏதாவது வழக்கு யாராவது தாக்கல் செய்து இருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. முருகானந்தத்திற்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்று எனக்குத் தெரியாது. அவர் என்ன படித்து இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. முருகானந்தத்தின் அம்மா பெயர் எனக்கு தெரியாது. சகோதரி பெயர் எனக்கு தெரியும். எட்டரை கிராமத்தில் முருகானந்தத்தின் அப்பா வெங்கடாச்சலம் எத்தனை வருட காலமாக கடை நடத்தி வந்தார் என்று எனக்கு தெரியாது. வியாழன்மேட்டில் 1988 ல் கடை நடத்தி வந்தார். எட்டரை கிராமத்தில் எப்போது கடை வைத்தார் என்பது எங்கு கடை வைத்தார் என்பதும் எனக்கு தெரியாது. முருகானந்தத்தின் பெயரில் கேபிள் டிவி லைசென்ஸ் இருக்கிறதா என்று நான் பார்த்ததில்லை. முருகானந்தத்தில் சகோதரிகளுக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்பதும் அவர்கள் கணவர்களின் வீடுகள் எங்கு இருக்கிறது என்றும் எனக்கு தெரியாது. 1984 ல் வெங்கடாசலம் சொத்து வாங்கிய காலத்தில் முருகானந்தத்திற்கு 14 வயது நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இனாம்புலியூர் என்பது சோமரசம்பேட்டை வழியாக செல்லக்கூடிய ஊர் என்றால் சரிதான். எட்டரை கிராமம் என்பது குழுமணி வழியாக செல்லக்கூடிய பகுதி என்றால் சரிதான் . முருகானந்தத்தின் வீட்டில் நடைபெறக்கூடிய சுக துக்க நிகழ்வுகளில் நான் பங்கு எடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். அவரது வீட்டில் நடைபெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளும் எனக்கு தெரியும். வெங்கடாசலம் எந்த வருடம் இறந்தார் என்ற விவரம்

எனக்கு தெரியாது. வெங்கடாசலம் இறந்த அன்று அவரது வீட்டில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது என்பதும் அப்போது காவல்துறையினர் வீட்டிற்கு வந்தார்கள் என்பதும் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. வெங்கடாசலம் உயிருடன் இருந்த காலத்தில் முருகானந்தத்தின் மீது சோமரசம்பேட்டை காவல் நிலையத்தில் பல புகார் மனுக்கள் கொடுத்து இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெங்கடாசலத்திற்கும் முருகானந்தத்திற்கும் இடையில் பதினைந்து வருட காலமாக பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்து வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. வெங்கடாசலம் உயிருடன் இருந்த காலத்தில் நான் சொத்துக்கள் தொடர்பாக பேசியது கிடையாது. நான் தற்போது அவரது மனைவியிடம் சென்று சொத்துக்கள் தொடர்பாக பேசியது கிடையாது. நான் எந்த காலகட்டத்திலும் வெங்கடாசலத்தின் மனைவியிடம் பேசியதே கிடையாது. நான் தாக்கல் செய்து இருக்கக்கூடிய சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள சந்ததிகள் அனைத்தும் முருகானந்தத்திற்கு தெரியும் என்றால் சரிதான். தியாகராஜனுடன் சேர்ந்து அவரது பெற்றோர்கள் வசித்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெங்கடாஜலத்திற்கு உடல் நல பாதிப்பு ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியாது. வெங்கடாசலம் உடல்நலம் பாதிப்பு ஏற்பட்டு அவரது வீட்டில் இருந்த கடைசி ஐந்து வருட காலத்தில் நான் அவரை சென்று பார்த்தது கிடையாது. எனக்கு இந்த வழக்கின் விபரங்கள் எதுவும் தெரியாமல் முருகானந்தம் அழைத்ததன் பேரில் வந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

( ஒம்.), XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.